**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## இறுதிநிலைப் பரீட்சை - சனவரி 2014

## (61) கணக்காய்வு

**ஒட்டுமொத்தத்தில் பரீட்சார்த்திகளின் செயலாற்றல் ஓரளவு திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. வினாவாரியான செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளது. பரீட்சகர்களின் பொதுவான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:**

**பரீட்சகர்களின் பொதுவான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:**

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இவ்வினா பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவைக் கொண்டுள்ளது. அநேகமாக சகல பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர். மற்றும் சிறிதளவான பரீட்சார்த்திகள் மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தும் ஏனையவர்களில் அதிகமானவர்கள் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் 50% க்கு மேலாகப் பெற்றிருந்தனர்.

**(a)** வினாவில் இப்பகுதியில் பரீட்சகர் நியதிச்சட்ட கணக்காய்வு மற்றும் தனிப்பட்ட கணக்காய்வு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டின் பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சித்துள்ளனர்.

அநேகமாக, சகல பரீட்சார்த்திகளும் இப்பகுதிக்கு விடையளித்ததுடன் சரியான விடையை எழுதி புள்ளிகளைப் பெற்றுக்கொண்டனர்.

எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் பரீட்சார்த்திகள் இரண்டு விதமான கணக்காய்வு பற்றி தவறாக விளங்கிக்கொண்டுள்ளனர்.

உதாரணத்திற்கு:-

சிலர் தனிப்பட்ட கணக்காய்வுக்காக உள்ளகக் கணக்காய்வின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தனிப்பட்ட கணக்காய்வுக் கம்பனியொன்றின் மோசடிகளையும் வழுக்களையும் கண்டுபிடிப்பதற்காக நடைமுறைப்படுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சிலர் நியதிச்சட்ட கணக்காய்வின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் இது ஒரு வெளிவாரி நபர்களினால் செயற்படுத்தப்படும் நியதிக் கூற்றுக்களின் கணக்காய்வு என குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிலர் நியதிச்சட்டக் கணக்காய்வு, பொதுத்துறைக் கம்பனிகளையும் தனிப்பட்ட கணக்காய்வு தனியார்துறைக் கம்பனிகளாலும் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**செயலாற்றுதல்: ஓரளவு திருப்திகரமானது**

**(b)** பரீட்சகர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றை கணக்காய்வு செய்வதிலிருந்து அதனுடைய பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர்கள், முகாமை என்பவற்றுக்குக் கிடைக்கும் மூன்று பயன்களை நிரற்படுத்தும்படி பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கின்றார்.

அநேகமாக இந்தப் பகுதிக்கு சகல பரீட்சார்த்திகளும் விடை எழுதியுள்ளனர். பரீட்சார்த்திகளில் சிலர் பயன்களுக்குப் பதிலாக கணக்காய்வின் (முதன்மை நிலை, இரண்டாம் நிலை) நோக்கங்களை விளங்கப்படுத்தியுள்ளனர்.

இது பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சிக்கின்ற பகுதியும்கூட.

சிறிதளவான பரீட்சார்த்திகள் மோசடி மற்றும் வழுக்களைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல், உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனங்களை இனங்காணல், பணிப்பாளர்களுக்கு நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளல் போன்ற தவறான விடைகளை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : திருப்திகரமானது**

**(c)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் இடைக்காலக் கணக்காய்வின் அனுகூலங்களைப் பரீட்சித்துள்ளார்.

அநேகமான பரீட்சார்த்திகள் சாதாரண நிதிக் கணக்காய்வின் பொதுவான அனுகூலங்களை எழுதியுள்ளனர். 35% - 40% மான பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியான விடைகளை எழுதி உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

தவறான விடைகளுக்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- இடைக்காலக் கணக்காய்வின் கிரயம் மிகவும் குறைவு
- கணக்காய்வு அபிப்பிராயத்தை உறுதிப்படுத்துவதற்கு
- கணக்காய்வு இடர் போன்றவற்றைக் குறைப்பதற்கு

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(d)** இங்கு பரீட்சகர் AATSL உறுப்பினர்களின் தொழில்சார் நடத்தை மற்றும் ஒழுக்கநெறிக்கோவை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருக்கின்றார். இது நேரடியான வினாவாக இருந்தாலும்கூட பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறுவதற்கான சரியான விடையை எழுதவில்லை.

பரீட்சகர், பரீட்சார்த்திகளை ஒழுக்கநெறிக்கோவையில் உள்ள **நேர்மை** மற்றும் **தொழில்சார் நடத்தை** என்பவற்றை விளக்கும்படி கோரியிருந்தார்.

சிறிதளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதி இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளையும் பெற்றனர். ஆனால் அவர்களில் சிலர் நேர்மை மற்றும் தொழில்சார் நடத்தை போன்ற சரியான விடையை எழுதவில்லை.

**செயலாற்றல் : திருப்திகரமானது**

**(e)** பரீட்சகர், பரீட்சார்த்திகளிடமிருந்து கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் பின்பற்றப்படும் தரக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளின் நோக்கங்களிலிருந்து 2 ஐக் குறிப்பிடும்படி கோரியிருந்தார்.

இவ்வினாவில் பரீட்சகரினால் என்ன பரீட்சிக்கப்பட்டது என்பதனை அதிகளவான பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதனை அறியக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் கணக்காய்வு நிறுவன மட்டத்தில் தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் பற்றி குறைவான அறிவைக் கொண்டிருப்பது தெரியவருகின்றது. மற்றும் அவர்கள் SLAUS உடன் இணக்கம், கணக்காய்வாளர்களைக் குறைப்பது, உண்மையானதும் நியாயமானதுமான கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவது போன்ற பொருத்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**செயலாற்றல் : குறைவானது**

**வினா இல. 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 16)

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றல் மிகக் குறைவு. சில பரீட்சார்த்திகள் வினாவின் சில பகுதிகளுக்கு விடையளிக்கவில்லை.

**ஒட்டுமொத்தத்தில் பரீட்சார்த்திகளினால் மிகவும் குறைவாக விடையளிக்கப்பட்ட வினாவாகும்.** மொத்தமாக வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து பெரும்பாலான பரீட்சார்த்திகள் 5 புள்ளிகளுக்குக் குறைவாகவே பெற்றிருந்தனர். சிறிதளவான பரீட்சார்த்திகள் மாத்திரம் ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து 8 - 12 இற்கு இடைப்பட்ட புள்ளிகளைப் பெறக்கூடியதாயிருந்தது.

**(a)** (i) இங்கு பரீட்சகர் ''கணக்காய்வு இடர்'' என்ற பதத்தின் வரைவிலக்கணத்தைப் பரீட்சித்திருந்தார்.

(ii) இப்பகுதியில் பரீட்சார்த்திகளை கணக்காய்வு இடரின் ஆக்கக் கூறுகளை விளங்கப்படுத்தும்படி கோரப்பட்டிருந்தது.

வினாவின் இப்பகுதிக்கு அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதவில்லை.

அவர்கள் கணக்காய்வு இடர் மற்றும் கணக்காய்வு இடரின் ஆக்கக்கூறுகளையும்கூட தெளிவாக வரைவிலக்கணப்படுத்தாதபடியால் வினாவின் இப்பகுதிக்கு புள்ளிகளைப் பெறத் தவறியுள்ளனர். சிலர் கணக்காய்வு இடர்களை விளங்கப்படுத்தாமல் கணக்காய்வு, இடர்களின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டதனால் மொத்தப் புள்ளிகளைப் பெறவில்லை.

**செயலாற்றல் : திருப்திகரமானதல்ல**

**(b)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர், ஏன் கண்டுபிடிக்கும் இடரை முழுமையாகத் தவிர்க்க முடியாது என்பதற்கான கோட்பாட்டு அறிவைப் பரீட்சித்துள்ளார். அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதியில் புள்ளிகளைப் பெற்றனர்.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் கீழேயுள்ளதுபோல் பிழையான விடைகளை எழுதியுள்ளனர்:

- கணக்காய்வாளரின் கவனயீனம்
- கணக்காய்வாளரின் குறைவான தொழில்நுட்ப அறிவு
- கணக்காய்வாளரின் நேர்மையின்மை
- முகாமை மீதுள்ள விசுவாசம்
- தகவலை மறைத்தல்
- மோசடி சம்பந்தமான சகல சான்றுகளையும் அழித்தல்

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(c)** இங்கு பரீட்சகர், கொடுக்கப்பட்ட சம்பவம்/ மதிப்பீட்டிலும் மேலதிகமான விற்பனையின் மீதான அவதானம் (முகாமை மோசடியாக அதிகரித்த விற்பனைப் பெறுமதியை அதிகரித்து அறிக்கையிடல்) பற்றிய பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு அறிவைப் பிரயோகிக்கும் அறிவையும் இவ்விடரை நிவர்த்தி செய்வதற்காக செயற்படுத்த வேண்டிய இரு கணக்காய்வு விதிமுறை களையும் பரீட்சித்துள்ளார்.

இது ஒரு செய்முறை வினா. வினாவின் இப்பகுதிக்கு அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடை எழுதவில்லை. அத்துடன் அவர்கள் வினாவுடனான பிரச்சினைகளை இனங்காணாமல் விற்பனையை உறுதிசெய்கின்ற பொதுவான கணக்காய்வு விதிமுறைகளை எழுதியிருந்தனர்.

உதாரணம்: விலைப்பட்டியலின் கணியத்தினைச் செவ்வை பார்த்தல்.

மேலும், சில பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றுகளின் மீதான தாக்கம் பொருண்மையானதா என்பதனைப் பரிசீலித்தல் போன்ற பொருத்தமற்ற விடைகளை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : திருப்திகரமானதல்ல**

**வினா இல. 03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 13)

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமானதல்ல

பரீட்சகர் இவ்வினாவில் பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு அறிவைப் பரீட்சித்துள்ளார்.

**(a)** இங்கு பரீட்சகர் ''கணக்காய்வுத் திட்டமிடலின் வீச்செல்லையைத் தீர்மானிக்கும் காரணிகள்'' மீதான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்துள்ளார்.

அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையை எழுதத் தவறியுள்ளனர். இவ்வினாவை பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை.

உதாரணம் ; பரீட்சார்த்திகள் கணக்காய்வு நோக்கெல்லை, கணக்காய்வு நேரம், காலம் போன்றவற்றை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : திருப்திகரமானதல்ல**

**(b)** பரீட்சகர், உறுதிப்படுத்தும் மட்டத்தில் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் மூலம் ஏற்படக்கூடிய இடர்கள் தொடர்பாக மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகளை உருவாக்குவதில் கணக்காய்வாளர் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று காரணிகளை நிரற்படுத்தும்படி கோரியிருந்தார்.

வினாவின் இப்பகுதி குறைவாகவே விடையளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அதிகமான பரீட்சார்த்திகள் ஒரு புள்ளியைக்கூடப் பெறவில்லை.

பரீட்சார்த்திகள், உள்ளதாம் தன்மை, கணக்காய்வாளரின் அறிவு, கணக்காய்வில் உள்ள பௌதிகரீதியான வரையறை போன்ற விடைகளை எழுதியிருந்தபடியால் புள்ளிகள் அளிக்கப்படவில்லை.

**செயலாற்றல் : குறைவு**

**(c)** பரீட்சகர், நிறுவனம் பற்றியும் அதன் உள்ளகக் கட்டுப்பாடுகள் அடங்கலான சூழல் பற்றியும் ஒரு விளக்கத்தை இடர் மதிப்பீட்டின் ஒரு பகுதியாகப் பெறுவதற்குக் கணக்காய்வாளர் என்ற முறையில் மேற்கொள்ளும் விதிமுறைகள் பற்றி பரீட்சித்துள்ளார்.

அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதத் தவறியுள்ளனர்.

சிலர் முன்னைய கணக்காய்வாளருடன் கலந்துரையாடல், வழங்குநர் மற்றும் கொள்வன வாளர்களுடன் கலந்துரையாடல், கட்டுப்பாட்டுப் பரிசோதனையை செயற்படுத்துவது போன்ற பூரணப்படுத்தப்படாத விடைகளை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(d)** பரீட்சகர், இங்கு கணிசமான விதிமுறைகளை செயற்படுத்த வேண்டிய மாதிரிகளின் அளவைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளை நிரற்படுத்தும்படி கோரியிருந்தார்.

அதிகமான பரீட்சார்த்திகள் மாதிரி தேர்வுசெய்தலுக்கான காரணங்கள் மற்றும் அதனுடைய அனுகூலங்கள் பற்றிய விடையை எழுதியுள்ளனர்.

சிறிதளவான பரீட்சார்த்திகள் சகல உருப்படிகளையும் செய்வதினால் உள்ள சிரமம், ஊடுசெயல்களின் காலம், வாடிக்கையாளரின் அலுவலகத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை போன்ற விடைகளை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : குறைவு**

**வினா இல. 04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 18)

இவ்வினா பரீட்சார்த்திகளின் கொடுக்கப்பட்ட சம்பவத்தில் பரீட்சார்த்திகளின் IT கோட்பாட்டு அறிவு, செய்முறை அறிவு, உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள், அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் வருட இறுதியில் சரக்கிருப்பு நிலைமை என்பவற்றைக்கூட பரீட்சிக்கின்றது.

**(a)** இவ்வினா கணினி தகவல் முறைமைச் சூழலில் பிரயோகக் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்துவதற்கான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்கின்றது.

அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதாமல் விட்டதால் இப்பகுதிக்கான மொத்தப் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

சில பரீட்சார்த்திகள் பெறுவழி அணுகுகைக் கட்டுப்பாட்டைத் தடுத்தல், கண்டுபிடித்தல், இரகசியக் குறியீட்டுக் கட்டுப்பாடு போன்றவற்றை எழுதியுள்ளனர்.

**செயலாற்றல் : குறைவு**

**(b)** இங்கு கொடுக்கப்பட்ட சம்பவத்தில் பரீட்சார்த்திகளிடமிருந்து உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை இனங்காணுமாறு கோரப்பட்டதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள பலவீனங்களைச் சீராக்கிப் பயன்படுத்துவது பற்றிய சிபாரிசுகளை விளக்கும்படி கோரப்பட்டிருந்தது.

(i) அதிகமான பரீட்சார்த்திகள் கொடுக்கப்பட்ட சம்பவத்தில் உள்ள பலவீனங்களை இனங்கண்டனர்.

(ii) அதிகமான பரீட்சார்த்திகள் எதிர்பார்த்த மட்டத்திற்கு மேலேயுள்ள பகுதி 1 இல் உள்ள பலவீனங்களைச் சீராக்குவதற்கான சரியான சிபாரிசை எழுதியிருந்தனர்.

இங்கு அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடை / காரணிகளை எழுதி இப்பகுதிக்கு நியாயமான புள்ளிகளைப் பெற்றனர்.

**செயலாற்றல் : திருப்திகரமானது**

**(c)** வினாவின் இப்பகுதியில் கொடுக்கப்பட்ட சம்பவக் கற்கையில் தொக்கிருப்புக் கணிப்பின்போதும் தொக்குக் கணிப்பின் பின்னரும் செயற்படுத்த வேண்டிய கணிசமான விதிமுறைகளைப் பரீட்சித்துள்ளனர்.

இப்பகுதிக்கான விடை எழுதும் செயலாற்றல் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம் தொடர்பாக விடையெழுதாமல் தொக்கிருப்புக்கான அறிதியீட்டலுக்கான பொதுவான கணிசமான விதிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அதிகமான பரீட்சார்த்திகள் தொக்கிருப்புக் கணிப்பால் பின்னர் பற்றாக்குறைத் தொக்கிருப்புப் பதிவேடுகளில் சீராக்கப்பட வேண்டும் என்ற உண்மையைக் கோடிட்டுக்காட்டத் தவறியுள்ளனர்.

பொருத்தமற்ற / தவறான விடைகளுக்கான உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:

- கணக்காய்வுப் பணியாளர்களினால் சரியாகத் தொக்கிருப்புக் கணிப்பு நடாத்தப்பட்டதனை அவதானித்தல்
- கணக்காய்வாளர், அவரே தொக்கிருப்புக் கணிப்பின் மாதிரியை எடுத்தல்
- தொக்கிருப்புத் தாள்களுக்கு களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து கையெழுத்துப் பெறல்

**செயலாற்றல் : குறைவு**

**வினா இல. 05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 18)

இவ்வினா பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியிலான அறிவைப் பல விடயப் பரப்புகளில் பரீட்சிக்கின்றது.

**(a)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் கட்டுப்பாட்டுப் பரிசோதனை மற்றும் கணிசமான விதிமுறைகள் இடையேயான வேறுபாடு பற்றிய கோட்பாட்டு அறிவைப் பரீட்சித்துள்ளார்.

எவ்வாறாயினும் 50% மான பரீட்சார்த்திகள் மாத்திரம் இப்பகுதிக்கு விடை எழுதியுள்ளனர். ஏனையோர் கீழே சொல்லப்பட்டவாறு பொருத்தமற்ற மற்றும் தவறான விடைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

- கட்டுப்பாட்டுப் பரிசோதனை என்றால் சரியான கணக்காய்வுச் சான்றுகளுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைப் பரீட்சித்தல்
- மாதிரிகளைத் தேர்வுசெய்வதற்கு கணிசமான விதிமுறைகள் தேவைப்படும்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(b)** இவ்வினா கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கணிசமான விதிமுறைகளில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்கின்றது.

அதிகமான பரீட்சார்த்திகள் சிறப்பாக விடை எழுதியுள்ளனர்.

சிலர், சில தவறான விடைகளை எழுதியுள்ளனர். அவை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்படவில்லை.

உதாரணமாக, நிலையான வைப்புகளின் உள்ளதாம் தன்மையில் பரீட்சார்த்திகள் முகாமை பிரதிநிதித்துவக் கடிதத்தைப் பெற்றுக்கொள்வது பற்றி எழுதியுள்ளனர்.

அட்டுறு செலவினங்களின் முழுமை நிலைக்காக பரீட்சார்த்திகள் ''முகாமையுடன் கலந்துரையாடவும்'' என எழுதியுள்ளனர்.

சம்பளங்களின் செம்மைத் தன்மைக்காக பணியாளர்களிடம் வினவவும்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(c)** இவ்வினாவில் பரீட்சகர் சட்டத்தரணிகளிடம் விசாரிப்பது, உரிமை உறுதிப்பத்திரம் செவ்வை செய்தல் என்பவற்றைச் செயற்படுத்த வேண்டிய காரணங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்துள்ளனர்.

அதிகமான பரீட்சார்த்திகள் உரிமை உறுதிப்பத்திரம் செவ்வை செயற்படுத்த வேண்டிய காரணத்திற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

ஆனால், அவர்கள் சட்டத்தரணிகளிடமிருந்து விசாரிப்பதற்கான காரணத்திற்காக சரியாக விடையளிக்கத் தவறியுள்ளனர்.

பரீட்சார்த்திகள் சட்டச் செலவுகள் மற்றும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை பற்றி மாத்திரம் குறிப்பிட்டுள்ளனர். இங்கு பரீட்சகர் நிகழத்தக்க பொறுப்பொன்றின் உள்ளதாம் தன்மை மற்றும் முழுமை நிலை பற்றி அறுதியீடு செய்வதற்கான விடையைக் கோரியிருந்தனர்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(d)** இவ்வினாவில் பரீட்சகர் கணக்காய்வுகளில் உள்ள வெளிவாரி உறுதிப்படுத்தல் பற்றிய அறிவைப் பரீட்சித்துள்ளார்.

(i) அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக வினாவை விளங்கிக்கொள்ளாமல் வெளிவாரி உறுதிப்படுத்தல் உள்வாரி உறுதிப்படுத்தலிலும் பார்க்க நம்பகத்தன்மை வாய்ந்தது என எழுதியுள்ளனர்.

(ii) அதிகமான பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்தல் கோருகின்ற முறைகளாக நேர், மறை, கலப்பு உறுதிப்படுத்தல்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

சிறிதளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதி இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

**செயலாற்றல் : திருப்திகரமானது**

**வினா இல. 06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 15)

இவ்வினாவில் பரீட்சகரினால் கோட்பாட்டு அறிவு பரீட்சிக்கப்பட்டது. இப்பகுதிக்கான விடைகள் கணக்காய்வுக் கற்கை நூலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(a)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் COPE இன் செயற்பாடுகளைப் பரீட்சித்துள்ளார்.

அதிகமான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொண்டு சிறப்பாக விடையளித்துள்ளனர்.

எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகள் COPE இன் கீழ் இயங்காத அரசாங்கத் திணைக்களங்கள், மாநகர சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் பற்றி எழுதியுள்ளனர். COPE இன் கடமைகள், கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளைப் பரீட்சிப்பதனை உள்ளடக்கும். ஆனால் கணக்காய்வுகளை நடத்துவதில்லை.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(b)** இவ்வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் கூட்டிணைப்பு ஆளுமையின் அர்த்தம் என்னவென்று பரீட்சித்துள்ளார்.

அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையை எழுதவில்லை. அதிகமான விடைகள் பொருத்தமற்றதாகவும் தவறானதாகவும் இருந்தபடியால் வினைவை முயற்சித்தவர்களால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன:

- கூட்டிணைப்பு உரிமங்களை ஆளுமையுடன் தொடர்புள்ள நிறுவகம்
- LKASs மற்றும் SLAUS களைப் பிரயோகிக்கும் ICASL குழு

**(C)** இப்பகுதி அதிகமான பரீட்சார்த்திகளால் விடை எழுதப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 70% மான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குப் மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பல்வேறு வகைப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்களை எழுதி நேரத்தை வீணடித்திருந்தனர்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(D)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் கணக்காய்வாளர் அறிக்கையிடும் திகதி வரையில் இடம்பெற்ற பின்னரான நிகழ்வுகள் தொடர்பில் இனங்காண்பதற்கு கணக்காய்வாளர் செயற்படுத்த வேண்டிய கணக்காய்வு விதிமுறைகளைப் பரீட்சித்துள்ளார்.

இப்பகுதிக்கு அதிகமான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். எவ்வாறாயினம் சில பரீட்சார்த்திகள் சீராக்கல் நிகழ்வுகளை இனங்கண்ட பின்னர் கணக்காய்வாளர் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

**செயலாற்றல் : ஓரளவு திருப்திகரமானது**

**(E)** வினாவின் இப்பகுதியில் பரீட்சகர் உரிமம் ஒன்று பற்றிய தொடர்ந்து இயங்கும் தன்மை பற்றிய எடுகோள் பற்றிக் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாட்டு நிகழ்வுகள் / நிலைமைகளைப் பரீட்சித்துள்ளார்.

அதிகமான பரீட்சார்த்திகள் மறை காசோட்டங்கள், மறை நிகரச் சொத்துகள் போன்ற நிதிசார் மற்றும் ஏனைய நிலைமைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.

**செயலாற்றல் : குறைவு.**

- * * * -